08.08.2025 OS.No. **54/2022**

**வா.சா.1 பெயர்: குருவன் த/பெ. மூசபோயன்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்**

**குறுக்கு விசாரணை:**

என்னுடன் பிறந்தவர்கள் குப்பன், கொண்டன், மொட்டையன் ஆகியோர்கள் ஆவார்கள். எனது தகப்பனாருக்கு எவ்வளவு சொத்து என்றால் சொத்து ஏதும் இல்லை. வழக்கு எவ்வளவு இடத்திற்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 4 ஏக்கருக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்திற்கு தெற்கு குருவன் இடம், வடக்கு மொட்டையன் இடம், மேற்கே மொட்டையன் இடம், கிழக்கு பக்கம் கொண்டன், குப்பம் இடம் என மாற்றி மாற்றி கூறிவிட்டு தற்போது தெரியவில்லை என கூறுகிறார். கிணறு உள்ளது. அதை எப்போது வெட்டியது என்றால் நாங்கள் கிரையம் வாங்குவதற்குமுன்பே வெட்டப்பட்டு இருந்தது. மின் இணைப்பு பெறப்பட்டு இருந்தது. நாங்கள் அண்ணன் தம்பி 4 பேர்களும் ஆளுக்குஒரு நாள் நீர் இரைத்தோம். நாங்கள் வழக்கு சொத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றோம் என்றால் வேடி, வெள்ளச்சி, முத்துவேடி, காந்தா ஆகியோரிடம் இருந்து வாங்கினோம். கிரைய பத்திரத்தின் படி கிணறு மற்றும் மின்இணைப்பில் பாதி பாகம் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான் . அதில் ஆளுக்குஒரு நாள் நீர் இரைத்தோம். கிரையம் வாங்கி எத்தனை வருடம் ஆகிறது என்றால் 1985 ல் கிரையம் வாங்கினோம். நான் கிரையம் வாங்கி என்ன பயிர் செய்தேன் என்றால் கரும்பு, நெல், பருத்தி, கேல்வரகு ஆகியவை 2 ஏக்கரில் பயிர் செய்தேன். மேற்படி கரும்பு திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வைத்தேன். அவ்வாறு எத்தனை வருடம் செய்தேன் என்றால் 7, 8 வருடம் கரும்பு போட்டு அனுப்பி வைத்தேன். மேற்படி நான் பயிர் செய்த 2 ஏக்கருக்கு செக்குபந்தி தெரியாது. ஆனால் நான் கரும்பு பயிர் செய்த பயிரை பீல்டு மேன் பார்த்து உரம் யூரியா கொடுப்பார். அதைதான் போடுவேன். பின்பு வெட்டி எடுத்து செல்வார்கள். மேற்படி கரும்புக்கு லோன் போட்டேனா என்றால் இல்லை. மொட்டையனும் அவருக்குரிய 2 ஏக்கரில் கரும்பு போட்டு பயிர் செய்தேன் என்றால் சரிதான். என் நிலத்தையும் மொட்டையன் நிலத்தையும் பிரிப்பதற்கு வரப்பு இருந்தததா என்றால் இல்லை. மொட்டையன் எத்தனை வருடம் கரும்பு பயிர் செய்தான் என்றால் எனக்கு தெரியாது. எனது பெயரில் உள்ள பட்டா நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். எனது பெயரில் எவ்வளவு இடத்திற்கு பட்டா உள்ளது என்றால் 2 ஏக்கருக்கு உள்ளது. மேற்படி எனது பெயரில் உள்ள பட்டாவிற்கு கந்தாயம் நான் தான் கட்டுகிறேன். எத்தனை வருடம் கட்டி வருகிறேன் என்றால் தெரியாது. ஆனால் கிரையம் வாங்கியதில் இருந்து கட்டி வருகிறேன். மேற்படி கந்தாயம் ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது என் வசம் உள்ளது. கிரையம் வாங்கிய பின்பு எனது

பெயரில் 2 ஏக்கருக்கும், மொட்டையன் பெயரில் 2 ஏக்கருக்கும் பட்டா கொடுத்துவிட்டார்கள். ஊத்தங்கரை கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கினேனா என்றால் இல்லை. பணம் போடுவேன் எடுப்பேன் , நகை தான் வைத்துள்ளேன். மேற்படி நகை வைத்ததற்கு சிட்டா கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி எனது பெயரில் உள்ள பட்டாவிற்கு ஊத்தங்கரை கூட்டுறவு வங்கியில் நான் கடன் வாங்கினேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. கிணறுபட்டா யார் பெயரில் உள்ளது என்றால் 4 பேர்கள் பெயரில் உள்ளது. மேற்படி கிணறு 8 ஏக்கருக்கும் 4 பேரில் உள்ளது. மொட்டையனுக்கு வந்த 2 ஏக்கர் நிலத்தை யாருக்கு விற்றார் என்றால் விற்றாரா இல்லையா என்பது எனக்கு தெரியாது. எனது நிலத்தை விற்றுவிட்டார்கள் அது தெரிந்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 7ம் பிரதிவாதி சஞ்சீவன் எப்போது நிலம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. சஞ்சீவன் நிலம் வாங்கிய இடத்தில் எத்தனை தென்னை மரம் உள்ளது என்பது தெரியாது. ஆனால் தென்னை மரம் உள்ளது. மேற்படி தென்னை மரம் யார் வைத்தது என்றால் மொட்டையனும் நானும் வைத்துள்ளேன். நான் எனது 2 ஏக்கரில் வைத்துள்ளேன் என்றாலும், மொட்டையன் 2 ஏக்கரில் வைத்துள்ளேன் என்றாலும் சரிதான். தென்னை மரம் 20,30 வருட மரமாக இருக்கும். எனது 2 ஏக்கர் நிலத்தில் உள்ள தென்னை மரங்கள் நான் குத்தகைக்கு விடவில்லை. நானே அறுவடை செய்கிறேன். 7மற்றும் 8 வது பிரதிவாதிகள் கிரையம் வாங்கியது பற்றி எனக்குதெரியாது. மொட்டையன் அவரது பிள்ளைகள் மற்றும் அவரது மனைவி ஆகியோர் சேர்ந்து 7,8 பிரதிவாதிகளுக்கு விற்று உள்ளார்கள் அவர்கள் அவர்கள் நிலத்தை வைத்து கொண்டு எனது நிலத்தை விற்று விட்டார்கள். அந்த பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் தெரியாது. கிரையம் பெற்ற சஞ்சீவனும், அவர்கள் கிரையம் பெற்ற சொத்து அவர்கள் பயிர் செய்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் எத்தனை வருடம் பயிர் செய்து வருகிறார்கள் என்று எனக்குதெரியாது. 1985ல் நாங்கள் கிரையம் பெற்ற சொத்தை நானும்மொட்டையனும் சரிபாகமாக ஆளுக்கு 2 ஏக்கர் பிரித்து கொண்டு அனுபவம் செய்து வந்தோம் என்றாலும் மொட்டையனுக்கு பாகமாக கிடைத்த சொத்தை தான் அனுபவம் செய்து வந்து பட்டா பெற்று அதன் பெயரில்தான் 7,8 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து மேற்படி கிரைய தேதி முதல் அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்குபாகமாக வந்து நான் கரும்பு பயிர்செய்த இடத்தை தான் மொட்டையன் மற்றும் அவரது குடும்பத்தார் விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். எவ்வளவு நிலம் மொட்டையன் விற்றான் என்றால் 2 ஏக்கர் விற்றுவிட்டான் அவரது பாகத்தை வைத்து கொண்டு எனது பாகத்தை விற்றுவிட்டார். என்னுடைய பாகம் தெற்கேயும் மொட்டையன் பாகம் வடக்கேயும் இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள பட்டா

என்னுடைய பாகத்திற்கு வந்ததாகவும் அதைதான் விற்றுவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 7,8 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பின்பு ஊத்தங்கரை கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குதெரியாது. மேற்படி 7,8 பிரதிவாதிகள் ராமன் , ஜெயா என்பவரிடம் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தி அதை ரத்து செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிணற்றிக்கு செல்வதற்கு வண்டி பாதை உள்ளதா என்றால் சரிதான். அது 4 பேருக்கு பாத்தியமானது. மொட்டையன் அவர்களது குடும்பத்திற்குள் 2008ல் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றாலும் அதன் அடிப்படையில் அவர் அவர் பாக சொத்தை அவரவர் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பாகம் பிரித்த சொத்தை தான் 7,8 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து உள்ளார்கள் என்றால் சரியல்ல. மொட்டையனுடைய பாக சொத்தை 2008 ல் அவரது குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாக சொத்தை தான் 2011 ல் 7,8 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றாலும் அதை பொருத்து கேள்வி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனக்குபாகமான 2 ஏக்கரை பொருத்து ஏற்பட்ட பட்டாவின் படி நான் தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றாலும் மொட்டையனும் 7,8 பிரதிவாதிகளோ எவ்வித இடைஞ்சலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் பெற்ற பின்பு பாகம் ஆகி தனிதனியாக பட்டா பெறப்பட்டு நாங்கள் தனிதனியாக அனுபவம் செய்து வந்தோம் என்ற விவரத்தை மறைத்து பாகம் பிரிவினைக்காக தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி மீது தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகை நஷ்ட ஈடு தொகை கொடுக்க வேண்டும் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.